14th March 1959]

THE HON. SRI R. VENKATARAMAN: ஒரு பெரிய விவாதத்திலே ஒவ்வொருவரும் சொன்ன எல்லாப் பிரச்சினைகளுக்கும் பதில் சொல்ல முடியாது. ஒன்றுக்கு மாத்திரம் நான் பதில் சொல்லி விடுகிறேன். மூடி இருக்கிற தொழிற்சாலைகள் எல்லாவற்றையும் சர்க்கார் எடுத்து நடத்தவேண்டுமென்ற கொள்கையை ஏற்க முடியாது—இதை எந்த ராஜ்யத்திலும் செய்ய முடியாது. மூடுவதற்குக் காரணமே அன்-இக்கனமிக் யூனிட்ஸ் என்பதுதான். சரியாக வேலை செய்ய முடியாத காரணத்தினால்தான் மூடப்படுகிறது. ஏதோ பிடிவாதமாக மூடப்படுகிறது என்று சொன்னால், அதை எடுத்து நடத்த ஏற்பாடு செய்யலாம். அதற்கு வழிகள் சட்டத்தில் இருக்கின்றன. ஆனால் தனிப்பட்ட நபர்களால் நடத்த முடியவில்லை, பழைய மில்களாக இருக்கின்றன, ஓட்டை-உடைசலாக இருக்கின்றன, அல்லது கட்டுபடியாகாது இருக்கின்றன என்றால், அவைகளை சர்க்கார் எடுத்து நடத்தினால், அது யாருக்கு நஷ்டம் என்று கேட்கிறேன். அதனால் மக்களுக்குத்தான் நஷ்டம். பொது மக்களுக்கு நஷ்டமாக இருப்பதால்தான் அவைகளை எடுத்து நடத்த முடியவில்லை. சமீபத்திலே ஒரு மில்—காளீஸ்வரர் மில்—இதை யாரும் எடுத்து நடத்த முன் வர மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். நான் கூட யார் யாருக்கோ சொல்லிப் பார்த்தேன்—ஒருவர் கூட முன்வர வில்லை—மாட்டேன் என்று சொல்லி விட்டார்கள். " ஹாட் பொட்டெட்டோ " மாதிரி—தொட்டால் கை வெந்து போகக் கூடியதாக—ஓட்டை-உடைசலாக இருந்தால் இவற்றை சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்த முடியாது. அதைத்தான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மற்றபடி, இதர விஷயங்களை சர்க்கார் பரிசீலனை செய்துதான் சொல்ல முடியுமே தவிர, கேட்டதற்கெல்லாம் உடனே ஏதாவது வரம் கொடுப்பதா ? நான் யோசனை செய்து தான் சொல்ல வேண்டும்.

DEPUTY SPEAKER: The question is—

' That the allotment of Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories—be reduced by Rs. 100 ".

The cut motion was put and lost.

DEPUTY SPEAKER: The question is—

" That the Government be granted a sum not exceeding Rs. 30,29,700 under Demand XXIV—Labour including Factories."

The Demand was put and carried and the Grant was made.

DEPUTY SPEAKER: The House will now adjourn and meet again at 8-30 a.m. on Monday, the 16th March 1959. 1-16 p.m.

The House then adjourned.

IV.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

A.—Statutory Rules, Orders and Notifications.

107. *Notification issued with G.O. No. 275, Local Administration, dated 9th February 1959, extending the term of office of the members of the Ambasamudram Panchayat, Tirunelveli District, under section 10 (1) of the Madras Village Panchayats Act, 1950.* [*Laid on the table of the House under section* 113 (4) *of* the Madras Village Panchayats Act, 1950 (Madras Act X of 1950).]